★ தனி இதழ் 1½ அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 593

நம் நாடு

திராவிட தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆடி 11உ வியாழன் (26—7—56) ★ ★ வெளியூர்: ஆடி 12உ வெள்ளி (27—7—56) [இதழ் 36

இரயில் வாகன்களில் குடியிருக்கும் ஊழியர்கள்

புதுடில்லி, ஜூலை 25—

பல்வேறு பிரிவு இரயில்வேக்களில், ஊழியர்களுடைய குடியிருப்பு இடமாக இரயில்வே வாகன்கள் உபயோகிக்கப்படுவதாக மக்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

மொத்தம் 1,353 வாகன்கள் இதுபோல உபயோகப்படுத்தப்படுவதாகவும், அதில் 684 வாகன்கள் பழுதுபட்டவை என்றும் இரயில்வே மந்திரியின் செயலாளர் ஷா நவாஸ்கான் தெரிவித்திருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

தனி மனிதரின் எதேச்சாதிகார எதிரொலி!

நிதிமந்திரி பதவியிலிருந்து தேஷ்முக் விலகியது ஏன்?

பிரதமர் நேருவின் அசாதாரணமான—சட்ட விரோதமான நடவடிக்கைகளே காரணம் என்கிறார்

"தனி மனிதரின் எதேச்சாதிகாரம் தோற்றுவிக்கக்கூடிய கொடிய விளைவுகளை, நிதி மந்திரியாயிருந்து பதவியைத் துறந்ததற்கான காரணங்களை விளக்கி சி. டி தேஷ்முக், மக்கள் சபையில் தாக்கல் செய்துள்ள அறிக்கை தெளிவாக எடுத்துக் கூறுகிறது.

தேஷ்முக் அறிக்கையின் சாரம் கீழ்வருமாறு:—

"1956-ம் ஆண்டு மாநில புது அமைப்பு மசோதாவில் கண்டுள்ளபடி, மராட்டியத்திலிருந்து பம்பாய் நகரத்தை பிரிப்பது என்ற சர்க்காரின் முடிவுக்கு நான் உடந்தையாக இருக்க விரும்பவில்லை.

"குறிப்பாக எனது தொகுதியான கொலாபாவிற்கும்—பொதுவாக மராட்டியத்திற்கும், இந்தியாவிற்கும் இத்தனை ஜீவாதாரமான நலன்கள் குறித்த இந்தப் பிரச்சினையில், பிரதம மந்திரி நேரு நடந்து கொண்ட முறையைப் பொதுவாக நான் ஆட்சேபிக்க—கண்டிக்க விரும்புகிறேன்.

"1955-ம் ஆண்டு நவம்பரிலும், 1956-ம் ஆண்டு ஜனவரியிலும், பம்பாயில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது குறித்து நீதி மன்ற விசாரணை நடத்துமாறு பம்பாய் சர்க்காரைக் கேட்டுக்கொள்ள டில்லி சர்க்கார் விரும்பாமல் போனதை—அல்லது இயலாமற் போனதை நான் கண்டிக்க விரும்புகிறேன்.

"மாநில புது அமைப்பு மசோதா மக்கள் சபைக்கு வந்து, பரிசீலனைக் குழுவிடம் அனுப்பப்பட்டிருக்கும் நிலையில், ஜூன்-மாதத் துவக்கத்தில், பம்பாயின் வருங்காலம்பற்றி பிரதம மந்திரி அறிக்கை வெளியிட்டது தகாது என்பதும் எனது முக்கியமான ஆட்சேபணையாகும்.

"விசாரணை நடத்துமாறு நான் கோரியதெல்லாம் வீணாயிற்று. பம்பாயின் வருங்காலம் பற்றி நான் பிரதம மந்திரியுடன் பேசவில்லை. அறிவிப்பிற்குப் பிறகு கலந்தாலோசிப்பதும் பிரயோசனமற்றது.

"பிரதம மந்திரி அடிக்கடி கேட்டுக்கொண்டதின் பேரில் 1950 மே திங்களில், நான் நிதி மந்திரி பதவியை ஏற்றுக் கொண்டேன்.

"1946 மே மாதத்தில் வேவல் பிரபு இந்தப் பதவியை ஏற்குமாறு என்னைக் கேட்டபோது நான் மறுத்தேன்.

"கொள்கைகள் சம்பந்தப்பட்டவரையில் நான் பிடிவாதமாக இருப்பேன் என்றும், கொள்கை விஷயத்தில் பெரும் அபிப்பிராயபேதம் ஏற்பட்டால் நான் இராஜிநாமாச் செய்யவேண்டி இருக்கும் என்றும் நான் பிரதம மந்திரியிடம் பதவி ஏற்குமுன் எச்சரித்தேன்.

"காங்கிரஸ் கட்சியில் நான் ஒரு உறுப்பினராக இருந்ததே கிடையாது.

"மத்திய சர்க்கார் மந்திரிகள், மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்ட பொறுப்புகளில் மட்டுமே அக்கரை காட்டவேண்டும்; தங்களது தொகுதி அல்லது மாநிலம் பற்றிய விவகாரங்களில் நாட்டமே செலுத்தக் கூடாது என்று கருதுபவன் நானல்ல.

"ஆயினும், எனது மற்ற சகாக்கள் எவரையும்விட, (பிரதம மந்திரி நீங்கலாக) எனது மாநில விவகாரங்களில் மிகக் குறைவான அக்கரையே நான் காட்டி வந்திருக்கிறேன்.

(அறிக்கை முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்)

★★★★★-★★★★-★★★★★★★★★

அறிவிப்பு

★

நண்பர்களுக்கும், நடிகத் தோழர்களுக்கும் நடிப்பு-இசைப்புலவர் கே. ஆர். இராமசாமி அறிவிப்பது:—

"நான் மலேயாவிற்கு எனது நாடகக் குழுவினருடன் செல்லவிருப்பது அனைவரும் அறிந்ததே. நண்பர்கள் பலரும் நான் புறப்படும் தேதி குறித்து ஆவலோடு கேட்டவண்ணமுள்ளனர்.

"பிரயாண வசதிகள் சில இன்னும் கிட்டியபாடில்லை; எனவே, அவை கிடைத்ததும் நான் புறப்படும் நாள், நேரம் பின்னர் அறிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

அன்பன்

கே. ஆர். இராமசாமி

★★★★★★★★★★★★★★-★★-★★

நடிப்பு-இசைப்புலவர் 'நண்பர் இராமசாமி'யாகிறார்

மலேயா செல்லும் நண்பருக்கு வழியனுப்பு விழா

அண்ணா தலைமையில் சிறப்பான நிகழ்ச்சி

★

"ரசிகர்களைப் பெறுவது கடினமானது அல்ல; ஒருநாள் ஒரு குறிப்பிட்ட காட்சியில் ஒரு நடிகர் திறம்பட நடித்துவிட்டால் ரசிகர்களைப் பெற்று விடலாம்; அந்த ரசிகர்களை தம் பக்கத்திலிருக்குமாறு காப்பாற்றிக் கொள்ள நடிகர்கள், தங்கள் நடிப்பினையும 'பதம்' கெடாமல் பார்த்துக் கொள்ளவும் செய்யலாம்; ஆனால், நண்பர்களைப் பெறுவது என்பது சுலபமானதல்ல; அந்த வகையில், கே. ஆர். இராமசாமி அவர்கள் நல்ல நண்பர்களைப் பெற்றிருக்கிறார்.

"இராமசாமி அவர்கள் ஒரு நல்ல நடிகர் என்பதைவிட, நல்ல தமிழர்—பண்பாளர்—நண்பர் என்றே நான் கூறவிரும்புகிறேன். அவரை ஒரு நடிகர் என்று அழைப்பதைவிட, நான் அவரை 'நண்பர் இராமசாமி' என்று அழைப்பதிலேயே பெருமை கொள்கிறேன்.

"மேல்நாடுகளில் உள்ள நடிகர்களைவிட, நமது நாட்டில் உள்ள நடிகர்களுக்கு வாய்ப்பு—வசதி இவை எல்லாம் மிக மிகக் குறைவாகத்தான் கிடைக்கின்றன. இந்தக் குறைவான வசதிகளையும், வாய்ப்புகளையும் கொண்டே சிறந்த நடிகர்களாக நம் நாட்டவர் திகழ்கின்றனர். அந்த வகையில் சிறந்த நடிகராக விளங்கும் நண்பர் இராமசாமி அவர்கள், மலேயா செல்கிறார் என்றால், அது நமக்கு மகிழ்ச்சி தருவதாகும்.

"நண்பர் இராமசாமி அவர்கள், மலேயாவிற்கு, கலை உலகின் தூதுவராகச் செல்கிறார்.

"சர்க்கார் சார்பில் செல்லும் கலைத் தூதுவர்கள் எல்லாம், சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவர்கள்—'இன்னதுதான் பேச வேண்டும்; இன்னதுதான் சொல்ல வேண்டும்' என்று ஏற்கனவே திட்டமிட்டு எழுதி வைத்துக் கொண்டு செல்பவர்கள்; ஆனால்,

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கை—இந்தியா நல்லுறவு முறியும்?

மொழிப் பிரச்சினை குறித்து பண்டாரநாயகா

கொழும்பு, ஜூலை 25—

இலங்கைக்கும்—இந்தியாவிற்குமிடையேயுள்ள நல்லுறவு முறிந்துவிடுமா? பாதிக்கப்படுமா?—என்பதை, இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா விளக்கியுள்ளார்.

இலங்கையின் மொழிப் பிரச்சினை குறித்து, பெடரல் கட்சித் தலைவர் வன்னியசிங்கம் சீக்கிரமே சென்னைக்குச்சென்று அங்கு ஒரு இயக்கம் நடத்தப்போவதாக வெளிவந்த பத்திரிகைச் செய்தி குறித்து அவர் கூறியதாவது:—

"இந்தச் செய்தி எவ்வளவு சரியானது என்பது எனக்குத் தெரியவில்லை; ஆனால், இது இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தைப் பொறுத்தது என்பதால், டில்லி சர்க்காரோ, சென்னை சர்க்காரோ இந்த முயற்சிக்கு ஆதரவு தரமாட்டார்கள் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. ஆனால் ஏதேனும் தப்பபிப்பிராயங்களினால் இந்த நிலை ஏற்படுமானால், அது மிக துரதிஷ்டவசமானதாகும். ஏனெனில், அது, இந்தியா—இலங்கை ஆகியவற்றிற்கிடையே உள்ள நல்லுறவுக்கு உலை வைப்பதாக இருக்கும்."

மேலும் பேசிய பண்டாரநாயகா, பிரதமர் நேரு தன்னை வரும் நவம்பர் திங்களில் டில்லிக்கு வருகை தருமாறு அழைத்திருக்கிறார் என்றும், அது புத்த ஜெயந்தியை ஒட்டிய விவகாரத்திற்காக என்றும், தன்னால் அழைப்பு ஏற்று டில்லிசெல்ல முடியுமா என்பதை இப்போதுகூற இயலாது என்றும், ஆனாலும் அந்த விழாவிற்கு ஒரு தூதக்குழுவை இலங்கையிலிருந்து அனுப்ப முடிவு செய்திருப்பதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள்

மக்களின் ஒத்துழைப்பு பெறுவதில் அதிகாரிகள் தோல்வி

மந்திரி பக்தவத்சலம் கவலை!

சென்னை, ஜூலை 25—

பிரதேச அபிவிருத்தி அதிகாரிகள் கூட்டம் ஒன்றில் பேசும்போது விவசாய மந்திரி பக்தவத்சலம் கூறியதாவது:—

"அதிகாரிகள், பிரதேச அபிவிருத்திக்காக இந்த மாநிலத்தில் நல்ல வேலை செய்துவருவதாக நினைக்கலாம்; ஆனால், புள்ளி விவரங்கள் வேறு விதமாகக் கூறுகின்றன.

"வேலை நிலை அறிக்கையில் காணப்படும் புள்ளி விவரங்கள், வேறு மாநிலங்களில் செய்யப்பட்டிருக்கும் வேலையோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது, இந்த மாநிலம், வெகு தூரம் பின் தங்கிக் கிடக்கின்றது என்பதைக் கூறுகின்றன. இது எனக்கு ஆச்சரியத்தையும், கவலையையும் தருவதாகும்.

"திட்டம் வற்புறுத்துவதெல்லாம், திட்டம் நிறைவேற்றப்படுவதில் மக்கள் பங்கு பெறவேண்டும் என்பதுதான்; ஆனால், அறிக்கையைப் பார்க்கும்போது, திட்டத்திற்கு மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதில் அதிகாரிகள் தோல்வியுற்றிருக்கின்றனர் என்று தெரியவருகிறது."

'இந்தி ஏகாதிபத்தியத்தை முறியடிக்க வேண்டும்'

'இன்றேல் நமது பரம்பரை பண்பாடு அழிந்துபடும்'

கருமுத்து தி. சுந்தரம் கருத்து

காரைக்குடி, ஜூலை 21—

"இந்தி மொழி ஆதிக்கத்திற்கு நாம் அடிமையாகிவிட்டால், பிறகு நமது பரம்பரைப் பண்பாட்டையும், நாகரிகத்தையும் நாம் இழந்துவிடுவோம்; எனவே, இந்தி ஏகாதிபத்தியத்தை முறியடிக்க வேண்டியது தமிழரின் கடமையாகும்"

என்று, திரு. கருமுத்து தி. சுந்தரம் அவர்கள், இங்கு தொடங்கிய குறள் விழாவில், காலஞ்சென்ற திரு. சொ. முருகப்பா உருவப்படத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்தியாவில், 1954-55-ல், 1,830 இலட்சம் பவுன் தேயிலை உபயோகிக்கப்பட்டது; 1952-53-ல் 1750 இலட்சம் பவுண்டு தேயிலைதான் உபயோகிக்கப்பட்டது.

நம் நாடு
தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 26—7—'56 வியாழன்

திட்டத்தில் நமது பங்கு!

'ஆறு நிறைய நீர் போனுலும் குக்கல் நக்கித்தான், குடித்தாக வேண்டும்' என்பது தமிழ்ப் பழமொழி. அப்பழமொழியை மெய்ப்பிக்கும் வகையில்தான், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பொதுவாகத் தென்னுடும் குறிப்பாகத் தமிழ்நாடும் பயன்பெற்றிருக்கிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வாழ்வளிக்கப் போடப்பட்ட திட்டங்கள் பலவும் வடநாட்டு எல்லை அளவுடன் நின்றுவிட்டன. ஏதோ கண்துடைக்கும் போக்கில் மிகச்சிறிய ஒன்றிரண்டுத் திட்டங்கள் தென்னுட்டிலும் மேற்கொள்ளப்பட்டன.

அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட திட்டங்களும், வேலையின்றித் தவிக்கும் பெரும்பான்மையான மக்களில் மிகச் சிலருக்காவது வேலை தரும் திட்டங்களாக இல்லை. அத்திட்டங்களால் நாட்டில் செல்வப் பெருக்கத்திற்கோ, சராசரி வாழ்க்கைத்தர உயர்வுக்கோ காதொடிந்த ஊசி அளவு ஆக்கம் ஏற்படுவதற்கு இடம் கிடையாது. அவை வெறும் எட்டுத் திட்டங்களே ஆகும் எனக் கருதப்படுவது எவ்வகையிலும் மிகைபடக் கூறியதாகாது.

ஆனுல், அதே நேரத்தில் வடநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள் ஒவ்வொன்றும், பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை தரும் தன்மை உடையனவாகும். அத்தொழில்கள் நிறுவப்பட்ட ... காரணமாக, அங்கு ... ...ங்கள் பு... எழுந்து ... காட்சியளிக்கக் காண்கிறோம்.

தேடித் தேடிக்கண்டுபிடித்து அங்கு வறுமை விரட்டியடிக்கப்படுகிறது. அதற்குப் பதிலாக வாழ்வு அரங்கேற்றப்படுகிறது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தினுல் வடநாடுபெற்ற தொழில் வளமும், தென்னுடு பெற்ற வறுமை பெருக்கத்தையும், நாம் பலமுறை புள்ளி விவரங்களுடன், எவரும மறுத்துக் கூற முடியாத நிலையில் எடுத்துக் காட்டியுள்ளோம். நாம் மட்டுமேயல்லாது, நமது மாகாண அமைச்சர்களில் சிலரும், ஒரோர் சமயத்தில் மனம்விட்டு வெளிப்படையாக இதுபற்றி வேதனையுடன் விளம்பிய உண்மைகளையும் சுட்டிக் காட்டியுள்ளோம்.

வடநாட்டில் வளம்பெருகும் வகையிலும் தென்னுட்டில் ஏழ்மை கூடும் வகையிலும் முதல் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள அக்கிரமத்தை நாமும், காங்கிரஸ் அமைச்சர்களில் ஒருவர் இருவரும் சுட்டிக் காட்டிய அளவுடன், உண்மை ஒளிந்து கொள்ளவில்லை. இந்த உண்மை சில திங்களுக்குமுன் இந்தியப் பேரரசின் தனிப்பெரும் விருந்தினராக வந்துசென்ற ரஷ்யத் தலைவர்கள் எண்ணையும கருத்தையும் கூட உறுத்தியிருக்கிறது. உள்ளத்தை வாட்டிய இச்செய்தியை, 'வடநாட்டில் தொழில் வளம் பெருகி இருக்கிறது — தென்னுடு அவ்வளத்தில் குன்றிக் கிடக்கிறது' என வெளிப்படையாகத் தங்கள் தாயகம் திரும்பியதும் ஓர் அறிக்கை மூலம் இடித்துக் கூறி இருக்கிருர்கள்.

தென்னுட்டை ஓரவஞ்சனையாக நடத்தும் போக்கை முதல் ஐந்தாண்டுத் திட்டத்துடன் கைவிட்டுவிட இந்தியப் பேரரசு மனம்கொள்ளவில்லை. இரண்டாம் திட்டத்திலும் அதே போல் பாரபட்சமாக நடந்து கொள்ள, முன்னிலும் தீவிரமாக ஆர்வம் காட்டி இருக்கிறது இந்தியப் பேரரசு.

வேண்டுமென்றே தென்னுட்டை வறுமைப் படுகுழியில் தள்ளுகிறது இந்தியப் பேரரசு என்ற நமது குற்றச்சாட்டை உறுதி செய்யும் முறையிலேயே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்பட்டு இருக்கிறது.

இவ்வுண்மையை மெய்ப்பிக்க விரிவான ஆராய்ச்சிக்கு அவசியமே இல்லை. இரண்டாவது திட்டத்தை மேலோட்டமாக ஒருமுறை பார்த்தாலே உண்மை எவருக்கும் புலனுகிவிடும்.

எடுத்துக்காட்டாக இரண்டாவது திட்டத்தில் திருச்சி மாவட்டம் பெற இருக்கும் வசதிகளை நோக்குவோம். அம்மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்தத் தொகையையும், அத்தொகை எந்தெந்த இனங்களில் செலவிடப்பட இருக்கிறது என்ற விளக்கத்தையும் ஒருமுறை நோக்கி... இரண்டாவது திட்டத்திலும ... முறையில் நமக்குப் பட்டை நாமம் சாத்தப்பட்டிருக்கிற இரகசியம் தெள்ளத் தெளிய விளங்கிவிடும்.

இரண்டாவது திட்டத்தில் திருச்சி மாவட்டத்தில் செலவிடுவதற்கென ஏறத்தாழ ஏழு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

எந்தப் புதியத் தொழில்களையும் துவங்குவதற்காகவும் அந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. திட்டம் என்ற சொல் உணர்த்தும் முழுப் பொருளில், அந்தச் செலவினங்களை ஒரு திட்டம் எனக் குறிப்பிடுவதுகூட பொருந்தக் கூடியதாக இல்லை. அவ்வாறு அதை திட்டம் எனக் குறிப்பிடுவதோ வடிகட்டிய பித்தலாட்டமாகும்.

அத்திட்டத்தை, ஒரு மாவட்ட ஆட்சிமன்றத்தின் சாதாரண வரவு-செலவுத் திட்டமென்றுதான் கூற வேண்டும். அதைத் தவிர்த்து, அபிவிருத்தித் திட்டமென்றே, பொருளாதார ஏற்பாடு என்றே, தொழில் வளர்ச்சி முறை என்றே அதற்குப் பெயர் சூட்டுவது, கொள்ளைக் கண்ணை செந்தாமரைக் கண்ணன் எனப் பெயரிட்டு அழைப்பது போன்ற கேலிக்குரியதாகும்.

கல்வி 108 இலட்சம்; மருத்துவம் 18 இலட்சம்; பொது சுகாதாரம் 28 இலட்சம்; நீர்ப்பாசனம் 129 இலட்சம்; போக்குவரத்து 115 இலட்சம்; விவசாயம் 26 இலட்சம்; கால்நடை 31 இலட்சம்; குடிசைத் தொழில் 23 இலட்சம்; கூட்டுறவு 58 இலட்சம்; சமுதாய நலத் திட்டம் 32 இலட்சம்; சிறிய பஞ்சாயத்து 2 இலட்சம்; அரிசன முன்னேற்றம் 50 ஆயிரம்;—என்ற வகையில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திருச்சி மாவட்டத்தில் செலவிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

திருச்சி மாவட்டத்தில் உள்ள பயங்கரமான வேலையின்மையை நிரந்தரமாகப் போக்கடிக்கக்கூடிய தன்மை, மேற்கூறிய செலவினங்கள் எதற்கும் அறவே கிடையாது. அவை நாகரீக சமுதாயத்தின் மிகமிகச் சாதாரண அன்றுடத் தேவைகளேயாகும். இந்தச் சாதாரண ஏற்பாட்டைத்தான், திருச்சி மாவட்டம், இரண்டாவது திட்டக் காலத்தில் பெற இருக்கிறது.

திருச்சி மாவட்டம் ஒரு எடுத்துக்காட்டு. இதே போன்றுதான் மற்ற மாவட்டங்களின் திட்டங்களும் இருக்கப் போகின்றன என்பதில் யாரும் ஐயம் கொள்ளத் தேவை இல்லை.

இரண்டாவது திட்டத்தில் தென்னுட்டின் பங்கு எவ்வாறு இருக்கிறது என்பதை, திருச்சி திட்டத்தைக் கொண்டே நிச்சயமாக முடிவு கட்டிக் கொள்ளலாம். இந்த அருமையான சாதனையைத்தான், தம்முடைய முயற்சியின் பெருவிளைவு என 'பச்சைத் தமிழர்' தம்பட்டம் அடித்துக் கொள்ளுகிருர். வேதனை அளிக்கும் விவகாரம்! வெட்கங்கெட்ட கொக்கரிப்பு!

மாமல்லபுரத்தில் சிற்பக் கலைப் பயிற்சி நிலையம்

மாணவர்களுக்கு ஓராண்டுக் காலப் பயிர்ச்சியளிக்கப்படும்

புதுடில்லி, ஜூலை 25—

தென்னிந்திய சிற்பக் கலையில் புகழ்பெற்ற மாமல்லபுரத்தில் சிற்பக் கலைப் பயிற்சியளிப்பதற்காக ஒரு நிலையம் ஏற்படுத்தப்படவிருக்கிறது. அங்கே 20 மாணவர்களுக்கு ஓராண்டுக் காலம் பயிற்சியளிக்கப்படும். அப்போது அவர்களுக்கு மாதத்துக்கு ரூ. 40 உதவிச் சம்பளம் வழங்கப்படும். இதற்காக சென்னை மாநிலத்திற்கு சுமார் ரூ. 44,500 மானியம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

'காமன்வெல்த்தில் அங்கம் வகிப்பது இழுக்கில்லையானுல்!'

'ஆங்கிலம் பொதுமொழியாக இருப்பதில் மட்டும் இழுக்கேது?'

'இந்தித் திணிப்புக் குழுவின் சிபாரிசு வேலிக்கு ஓணன் சாட்சி போன்றதே!'

"இந்தியாவின் மொழிப் பிரச்சினையைக் குறித்து ஆராயப் புகுந்தால் ஆச்சரியமாக இருக்கும். ஜம்மு—காஷ்மீர், அசாமிலுள்ள மலை சாதியினர் பிரதேசங்கள் நீங்கலாக உள்ள இந்தியப் பிரதேசங்களில் மொத்தம் 782 மொழிகள் வழக்கப்பட்டு வருகின்றன.

"இவைகளில் 63 மொழிகள் வெளியார் மொழிகளாகும். மத்தியப் பிரதேசத்தில் மட்டும் 377 மொழிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆகவே, இந்தியாவில் 782 மொழிகளைக்கொண்ட பல்வேறு தாய் மொழியினர் வாழ்ந்துவருகின்றனர்.

"தொட்டிலில் படுத்து தாலாட்டு கேட்கும் பருவத்தில், மழலைகள் இயல்பாகப் பழகும் மொழிதான் தாய்மொழி என்று, தாய் மொழிக்கான இலக்கணத்தை அறிஞர்கள் கற்பித்துள்ளனர்.

"இவ்வளவு மொழிகளிலும், இன்று இந்தியாவில் பெரும்பாலானவருக்குத் தெரிந்த மொழியாக உலாவுவது ஆங்கிலந்தான்

"காமன்வெல்த்தில் அங்கமாக இருப்பதில் எந்தவித இழுக்குமில்லை என்று எங்ஙனம் கருதப்படுகிறதோ, அதுபோலவே, ஆங்கிலம் பொது மொழியாக இருப்பதிலும் தப்பில்லை — என்று வாதிப்பதில் ஒரு தப்பும் இல்லை.

"இந்தியாவின் எல்லாவிதத் துறைகளுக்கும் இன்று ஆங்கிலம்தான் பொது மொழியாகப் பயன்பட்டுவருகின்றது. அப்படிப்பட்ட பொது மொழியை அகற்ற வேண்டுமென்று முனைவது எளிதான காரியமல்ல.

"இந்தியாவின் பெரும்பான்மையினரின் மொழி இந்தி என்று கூறுவதற்கில்லை. தனித்தனி மொழியினராகப் பங்கு வைத்துப் பார்க்கும்போதுதான் இந்தி பேசுவோர் பெரும்பான்மையினராகத் தெரிகின்றனர். இந்தி, உருது, இந்துஸ்தானி, பஞ்சாபி ஆகிய நான்கு மொழிகளையும் ஒரு இனத்தில் சேர்த்துக் கணக்காக்கப்படும்போதுதான், மொத்தம் 14,99,44,310 இந்திமொழியாளர்கள் தெரிகிருர்கள். இத்தொகை மொத்த மக்கள் தொகையில் 46.3 சதவிகிதம் தானுகிறது. மிகுதியுள்ள 53.7 சதவிகிதத்தவர்கள் பிற மொழியாளர்கள் என்பதை மறுக்க முடியாது.

"தெலுங்கு, மராத்தி, தமிழ், வங்காளம், குஜராத்தி, கன்னடம், மலையாளம், ஒரிசா, அசாம் போன்ற மொழியினர் கடந்த நூறு அல்லது நூற்றைம்பது வருடப் பழக்கத்தால் ஆங்கிலத்தில் சகஜமாகியுள்ளார்கள். அதுபோன்றே இந்தி மொழியாளர்களும் ஆங்கிலத்தில் சகஜமுள்ளவர்கள்தான் அங்ஙனம் இருசாராரும் இன்று சந்தித்து வருகிற பொது மொழியையே கொஞ்ச காலத்திற்குத் தொடரச் செய்வதை இந்தி மொழியாளர்கள் பெருந்தன்மையாக ஏற்க வேண்டும்.

"ஆனுல், இப்போது நிலைமைகள், அதுமாதிரி அமைதியான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதாகத் தெரியவில்லை. மொழிக் கமிஷன், இப்போதிருந்தே ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியைப் புகுத்த வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டுள்ளது. 'வேலிக்கு ஓணன் சாட்சி' என்பதுபோல, இக்கமிஷனிடம் இந்தி வெறியாளர்கள் இந்தச் சிபாரிசுகளைத் தானே எதிர்பார்ப்பார்கள்?

"மொழி வழி மாநிலப் பிரிவினை என்பதின் பேரால் நாட்டின் நாலுபாகங்களிலும் நடக்கும் அமளியைக் கண்டு உண்மையான மனவேதனை அடைபவர்கள், இனியும் கொஞ்சம் வருடங்களுக்கேனும் மொழிப் பிரச்சினையைக் கையாளுவதில் முனையவேமாட்டார்கள்.

"அரசாங்க மொழியின் பேராலும் ஒரு அமர்க்களத்தை நடத்தி, இந்தியைப் புகுத்த முனையும் செய்கையை இருதயமற்ற செய்கை என்றுதான் தீர்ப்பு கூற முடியும்.

"ஆங்கிலத்தை அகற்றுவதில் அவசரப்பட்டு வீண் விளைவுகளை விலை கொடுத்து வாங்கவேண்டாம் என்று எச்சரிக்க விரும்புகிறோம்."

என்று, 21—7—56 'தின மலர்' இதழ், தனது தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

உலகில் 3,000 மொழிகள் பேசப்படுகின்றன!

30 மொழிகளில்தான் உலக இலக்கியங்கள் அச்சிடப்படுகின்றன

ஆண்டிற்கு 500 கோடி புத்தகங்கள் அச்சாகின்றன!

உலகில் ஆண்டுக்கு 500 கோடி புத்தகங்கள் (பிரதிகள்) அச்சிடப்படுகின்றன!

இதில் 50 சதவிகிதம் பாடப்புத்தகங்கள்!

பத்து நாடுகள்தான் பிரசுரத் தொழிலை சிறப்பாக நடத்துகின்றன; இந்த நாடுகளில் மட்டும் ஆண்டுக்கு 400 கோடி புத்தகங்கள் அச்சாகின்றன!

ஆண்டுக்கு 10,000 பிரதிகளுக்கும் குறைவாக மொத்த உற்பத்தியுள்ள நாடுகளும் உள்ளன!

பிரச்சுரச்சாதன வசதியின்மை, நாணய பரிவர்த்தனை, தபால் கட்டண உயர்வு, உரிமைப் பாதுகாப்பின்மை—இவை போன்ற காரணங்களால், பல நாடுகளில், பிரசுரத் தொழில் செழிக்கவில்லை. மொழிபெயர்ப்பு வசதி பெருகாததால் சிறந்த நூல்களை அறியும் வாய்ப்பு எல்லாருக்கும் கிடைப்பதில்லை!

பிரசுரத் தொழிலில் அமெரிக்காவும், பிரிட்டனும் முன்னணியில் நிற்கின்றன. பிரிட்டனில் 8 500 நிறுவனங்கள் புத்தக விற்பனையில் ஈடுபட்டிருக்கின்றன. அமெரிக்காவிலும் புத்தக விற்பனை நிறுவனங்கள் செழிப்பாகத் தொழில் நடத்துகின்றன.

உலகில் சுமார் 3,000 மொழிகள் பேசப்படுகின்றன; ஆனுல், சுமார் 30 மொழிகளில்தான் உலக இலக்கியங்கள் அச்சிடப்படுகின்றன!

மத்திய மந்திரிகள் சேலம் வருவராம்!

பாக்சைட், இரும்புக் கனிப் பொருள்களை பார்வையிடுவராம்!

புதுடில்லி, ஜூலை 24—

மேட்டூர் அணையையும், அடுத்து வெட்டப்பட்டுள்ள கால்வாய் ஒன்றையும் பார்வையிடுவதற்காகவும், சேலத்தில் இரும்புக் கனிகள் கிடைக்கக்கூடியதும், பாக்சைட் கிடைக்கக்கூடியதுமான பிரதேசங்களைக் காணவுமாகத் தோழர் எஸ். வி. இராமசாமி எம். பி. அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, மத்திய திட்ட இலாகா உதவி மந்திரி எஸ். என். மிஸ்ரா வரும் ஆகஸ்டு 4-ந் தேதியன்று சேலம் வருவார் என்று தெரிய வருகிறது.

மேலும், அலுமினியத் தொழிற்சாலை நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகள், இடம் இவற்றை ஆராய்வதற்காக இரண்டு நிபுணர்களுடன் கனரகத் தொழில் இலாகா மந்திரியான எம். எம். ஷாவும், ஆகஸ்டு இறுதியில் தோழர் இராமசாமி கேட்டுக்கொண்டதற்கு இணங்க, சேலம் வருவார் எனத் தெரிகிறது.

கழகச் செய்திகள்

சென்னை 23-வது வட்ட தி. மு. கழகம்

22—7—56 காலை 10 மணியளவில், கழகப் பணிமனையில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில், தோழர்கள் ஜெ எஸ் மணி (செயலாளர்), ஈ. எஸ். மணி (பொருளாளர்), ஆகியோரின் விலகல் கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு, தோழர்கள் வி. எஸ். கோவிந்தராசன், ந. வேதாசலம் ஆகியோரை செயலாளராகவும் பொருளாளராகவும் தேர்ந்தெடுத்து முடிவு செய்யப்பட்டது.

வேடிச்சிபாளையம் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

22—7—56 மாலை 6½ மணிக்கு வே. பொ. தங்கவேலு தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது தோழர்கள் முத்து, எம். கே. கரிகாலன், கலையரசன் ஆகியோர் பேசினர். தோழர்கள் அனைவருக்கும் தோழர் கு சிங்காரம் அவர்கள் இல்லத்தில் விருந்தளிக்கப்பட்டது.

மணப்பாறையில் தி. மு. க. பொதுக்கூட்டம்

21—7—56 மாலை 6 மணிக்கு, பழைய சந்தைத் திடலில். தோழர் மா இளங்கீரன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் கி. மனோகரன், காசிநாதன், தி. வி முத்துகிருட்டிணன், பாலசுப்ரமணியன், மதியாணன், வடிவேலன், சக்ரபாணி ஆகியோர் பேசினர்.

பொன்மலை— மேலக்கற்கண்டார் கோட்டை தி. மு. கழகம்

17—7—56 இரவு 7½ மணிக்கு, கழக இல்லத்தில், தோழர் கே. துரைராஜ் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களின் தந்தையார், கிளைக் கழகத் தோழர் வி. தங்கவேலுவின் தாயார் ஆகியோர் மறைவுற்றமை குறித்து கிளைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்தும், மற்றும் சில முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

செட்டிபல்லி தி. மு. கழகம்

21—7—56ல், தோழர் கோ. குணசீலன் தலைமையில், கழக மனையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தின்போது தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பப்பட்ட உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் வழங்கப்பட்டன பின்னர், கழகப் பிரசாரத்துக்காக, 'பாண்டியன் கலைக் குழு' என்ற பெயரில் நாடகக் குழு ஒன்றும் அமைத்து, குழுவிற்கு, தோழர் மு. தம்பிதுரை செயலாளராகவும், தோழர்கள் செ சின்னதம்பி, கோ. கோவிந்தசாமி வெங்கடப்பன், க. குண்டப்பன் ஆகியோர் நிர்வாகிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், கழக வரவு-செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டன.

தேரிழந்தூரில் தி. மு. க. பொதுக்கூட்டம்

23—7—56 மாலை 6 மணிக்கு, தேரிழந்தூர் கடைவீதியில், கிளைக் கழகச் சார்பில் தோழர் என். கிட்டப்பா தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பொ. தருமன், கோ. சி. மணி, கே. எஸ். சௌந்தராசன் ஆகியோர் பேசிய பின், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தற்கால அரசியல் நிலை குறித்தும், பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் ஈடுபடுவதின் அவசியம் குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

சேலம் 14-வது வட்ட தி. மு. க. துவக்கம்

15—7—56 காலை 10 மணிக்கு, சேலம் நகர 14-வது வட்ட தி மு. கழகத் துவக்க விழா, தோழர் எஸ். ஏ. அன்புக்கரசு தலைமையில் நடைபெற்றது. தோழர் இ. ஆர் கிருஷ்ணன் கொடியேற்றி வைத்தார். தோழர் சிற்றுளி சுப்பிரமணியம் கழகத்தைத் துவக்கிவைத்துச் சிறிதுநேரம் பேசியபின், தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள், தி மு. கழகம் பொதுத் தேர்தலில் கலந்துகொள்ளும் அவசியம்பற்றி விளக்கமாகப் பேசினர்.

அன்று மாலை 6-30 மணிக்கு. நகர தி. மு. கழகத்தின் சார்பில் 'வி' மார்க்கெட் மைதானத்தில், தோழர் வி. சிவப்பிரகாசம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் இ. ஆர். கிருஷ்ணன், சிற்றுளி-சுப்பிரமணியம், ப. கண்ணன் ஆகியோர் பேசியபின், தோழர் ஈ வெ. கி சம்பத் அவர்கள் மும்முனைப் போராட்டங்கள் குறித்தும், முதல்—இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டது குறித்தும், வரும் பொதுத் தேர்தல் குறித்தும் நீண்டநேரம் சொற்பெருக்காற்றினர்.

ஆமதாபாத் தி. மு. கழகம்

ஆமதாபாத் தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம், பாண்கோர் நாக்கா, காந்தி கதர் நிலைய மேல் மாடியில் 13—7—56 மாலை 5 மணிக்கு தோழர் இரா. தணிகாசலம் தலைமையில் நடைபெற்றது தோழர் ஆர் பி. சுந்தரம் இயக்கப்பண் பாடினர்; தோழர் ப பாண்டியன் கடந்த கால கழகத்தின் செயல்முறைகள் பற்றி விளக்கினர். பின்னர், தோழர்கள் இரா. நடராசன், இரா வைத்திலிங்கம் ஆகியோர் தி மு கழக 2-வது மாநில மாநாட்டு முடிவுகள் குறித்தும், தோழர் பொ இரத்தினவேலன் கழகத்தின் இன்றைய நிலை—எதிர்கால வளர்ச்சி குறித்தும் பேசினர்; தோழர் ச சந்திரன் கிளைக் கழகம் கழகத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு எடுத்த முடிவினை விளக்கிப் பேசினர். பின், தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டன. இறுதியில் சா. விஜயகம் அவர்களின் இசை நிகழ்ச்சியும், மு சா மன்றத்தாரால் 'திவான் பகதூர் திருவேங்கடம் பிள்ளை' நாடக நிகழ்ச்சியும் நடைபெற்றன.

அரியநகர் தி. மு. கழக 2-வது ஆண்டு விழா

22—7—56 மாலை 6 மணியளவில், அரியநகர் தி.மு. கழக இரண்டாம் ஆண்டுத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் மாரியம்மன் கோவில்திடலில் தோழர் சு கிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. தோழர் டி லோகநாதன் குழுவினரின் இசை நிகழ்ச்சியுடன் விழா துவங்கிற்று. தோழர்கள் கே எஸ் கண்ணன், மா. சின்னப்பிள்ளை, பு சா. திராவிடச் செல்வம் ஆகியோர் சிறிதுநேரம் சொற்பொழிவாற்றிய பின், தோழர் என். சிவரத்தினம் அவர்கள், விடுதலைக்குப் பின்பு புதுவை மக்கள் படும் இன்னல்களைப் பற்றியும், தி. மு. க. மாநில மாநாட்டுத் தீர்மானங்களின் முக்கியத்துவங்கள் பற்றியும் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர்.

முகவூர் தி.மு. கழகம்

22—7—56ல், தோழர் வீ. அ முத்தையா தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், இலங்கைவாழ் தமிழர்களைச் சுட்டுவீழ்த்திய பண்டார நாயகாவின் ஆட்சியைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், 10—8—56ல் கிளைக் கழகச் சார்பில் பொதுக்கூட்டம் ஒன்று நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

'இந்தியை ஏற்றால் நமது பண்பாடு அழியும்'

குறள் விழாவில் கண்ணதாசன்

காரைக்குடி, ஜூலை 24—

"இன்று இந்தி மொழி நம்மிடையே வரப்பார்க்கிறது; அஞ்சல் அலுவலகம், இரயில் நிலையம் ஆகிய இடங்களுக்குவந்து, இன்று, நாணயத்திற்கும் தொடர்ந்து விட்டது; இப்போது அரசாங்கத்தின் நாணயமும் கெட்டுவிட்டது.

"வேறுமொழிகளை அனுமதிக்கக்கூடாது; ஏனெனில் மொழியுடன் கலாச்சாரமும் உள்ளேவந்து சேரும். உதாரணமாக, வடவர் கலாச்சாரமும், ஆங்கிலேய கலாச்சாரமும் நமது மொழியிலும் வாழ்விலும் ஆதிக்கம் செய்துள்ளதைக் காணலாம். வடமொழிக் கலாச்சாரம்தான் சமய வெறியைப் புகுத்தியது. கற்பனையோ, இலக்கியமோ இல்லாத ஒரு மொழி வருமானால் அதை நாம் எதிர்க்கவேண்டும்; அதற்கென வேற்றுமைகளைப் பாராது கூட்டணி அமைக்கவேண்டும்,"

—என்று, 21-7-56 மாலை, இவ்வூர் காந்தி சதுக்கத்தில் நடைபெற்ற குறள் விழாவில் பேசுகையில், தோழர் கண்ணதாசன் குறிப்பிட்டு விட்டு, தொடர்ந்து பேசியதாவது :—

"திருக்குறள், பேதங்களைக் கடந்து இதயங்களை ஒன்றுபடுத்துகிறது என்பதற்கு பலதரப்பட்ட அறிஞர்கள் ஒன்றுகூடி இருப்பதே எடுத்துக்காட்டாகும்

"வல்லினம், மெல்லினம், இடையினம்—ஆகிய சிறப்புக்கள் தமிழ் மொழியில்தான் உண்டு உயிரெழுத்தும், மெய்யெழுத்தும் தமிழுக்குத் தனிச்சிறப்பு தருபவை. தமிழனுக்கு உள்ள பெரும் சிறப்பு, மொழி! அதற்கு மகுடமாக இருப்பது குறள்!"

பிழை திருத்துவோர் நிலை

மக்கள் சபையில் அமைச்சர் விளக்கம்

புதுடில்லி, ஜூலை 25—

உழைக்கும் பத்திரிகையாளர்கள் பட்டியலில், பத்திரிகைகளில் செயலாற்றும் பிழை திருத்துவோரும் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்; உழைக்கும் பத்திரிகையாளர்கள் சட்டம், இவர்களுக்கும் பொருந்தும்; பத்திரிகை அல்லாத தனிப்பட்ட அச்சகங்களில் வேலை பார்க்கும் பிழைதிருத்துவோர், தொழிற்சாலைகள் சட்டம் அல்லது கடைச் சிப்பந்திகள் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படுவார்கள்" என்று மக்கள் சபையில் தொழிலாளர்துறை துணை அமைச்சர் அபீத்அலி கூறியுள்ளார்.

கைத்தறிப் பதிவு முறைக்கு எதிர்ப்பு

நெசவாளர் பஞ்சாயத்து முடிவு

சேலம் மாவட்ட நெசவாளர் பஞ்சாயத்து சார்பில், திரு கே.எல். ரங்கசாமி கூட்டிய நெசவாளர் பிரதிநிதிகள் மாநாடு, சேலத்தில், திரு கே. கே. ராமதாஸ் தலைமையில் நடைபெற்றது.

கைத்தறிப் பதிவு உத்தரவை எதிர்த்து பெரும்பான்மையான வாக்குகளால் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பதிவு முறையை எதிர்த்து திருவாளர்கள் கே. ரகுநாத(செட்டியார்), ஏ. சித்தய்யன், கே. பி. பச்சையப்பன், சி. வி. நரசிம்மய்யர், பி. வி. ஏ. சுப்பிரமணிய(முதலியார்) ஆகியவர்கள் பேசினர்.

பெரும்பான்மையினர் முடிவை திரு. ஏ. ஆர் முத்துசாமியும், திரு. எம். ஆர். கந்தசாமி (முதலியாரும்) ஆட்சேபித்தனர்.

மில்கள் அதிகத் தறிகள் ஏற்படுத்துவது கூடாதென்றும் கூறப்பட்டது. இதுபற்றி ஆவன செய்ய திரு. கே. எல். ரங்கசாமியை கன்வீனராகக்கொண்ட 13 பேர் கொண்ட குழு நிறுவப்பட்டது.

பதிவுக் கொள்கையை விளக்கி கூட்டுறவுத் துணைப் பதிவாளர் பாலகிருஷ்ண நாயர் அவர்களும் பேசினர்.

விசைத்தறி புகுத்தும் திட்டத்திற்கு எதிர்ப்பு

காங்கிரஸ்காரர்கள் ஏற்பாடு செய்த கூட்டத்தில் கண்டனத் தீர்மானம்

சேலம், ஜூலை 24—

டில்லி சர்க்காரின் புதிய ஜவுளிக் கொள்கைக்கு, நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், நூல் விற்பனையாளர்கள், கைத்தறி ஜவுளி விற்பனையாளர்கள், 'மாஸ்டர்' நெசவாளர்கள், காங்கிரசார் ஆகியோர் அடங்கிய கூட்டம் ஒன்றில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆலைகளில் தாமாகவே இயங்கும் தறிகளைப் புகுத்துவதற்கும், கைத்தறிகளை அழிக்கக்கூடிய விசைத்தறிகளைப் பெருக்குவதற்கும் பலத்த கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று இங்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

கட்டாயமாகக் கைத்தறிகளைப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்ற சர்க்காரின் திட்டத்திற்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதுடன், அந்தத் திட்டத்தை சர்க்கார் உடனடியாகக் கைவிட வேண்டும் என்றும் கோரப்பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டத்தை சேலம் நகர காங்கிரஸ் கமிட்டியினர் ஏற்பாடு செய்தனராம்.

அனுதாபம்

ஆண்டாச்சன்பேட்டை தி. மு கழகத் தோழர் சி செயராமன் அவர்களின் மகன் இயற்கை எய்தியமைக்கு கிளைக் கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சேலம் 19-வது வட்ட தி. மு. க. படிப்பகம்

சேலம் அம்மாப்பேட்டை மெயின் ரோடு, 19-வது வட்ட தி. மு கழகக் கட்டிடத்தில் படிப்பகம் ஒன்று நிறுவி, கழகத் தோழர்கள் பலர், இயக்க ஏடுகளும் மற்ற ஏடுகளும் வாங்கி அன்பளிப்பாக அளித்து வருகிறார்கள். தினசரி கழகத்திலே இரு நூற்றுக்கு மேற்பட்ட தோழர்கள் படித்துப் பயன் பெறுகிறார்கள். படிப்பகத்திற்கு, 'நம்நாடு', 'தினத்தந்தி', 'சுதேசமித்திரன்', 'மெயில்' (ஆங்கில ஏடு), 'திராவிட நாடு', 'முரசொலி', 'தென்றல்', 'தீச்சுடர்', 'திராவிடன்' 'மன்றம்', 'தனியரசு', 'சுதேசமித்திரன்' (வார ஏடு), 'திராவிட சினிமா', 'பகுத்தறிவு', 'தென்றல் திரை', 'வெள்ளி வீதி', 'கலைச்சோலை', 'திரைவானம்', 'நடிகன் குரல்', 'தமிழ் நாடு டைம்ஸ்' (ஆங்கில ஏடு), 'கலை மன்றம்', 'காதல்', 'மர்மக்கதை' ஆகிய 23 ஏடுகள் வரப்பெறுகின்றன. படிப்பகம் காலை 7 மணி முதல் இரவு 10 மணி வரை திறக்கப்பட்டிருக்கும் என செயலாளர் அறிவிக்கிறார்.

கல்லக்குடி நடராசன் நினைவுப் படிப்பகம்

21—7—56ல், மதுரை, கல்லக்குடி நடராசன் நினைவுப் படிப்பக உறுப்பினர் கூட்டம் தோழர் அ. குருசாமி தலைமையில் நடைபெற்றபோது, படிப்பக வரவு-செலவுக் கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர், செயற்குழு கலைக்கப்பட்டு, தோழர்கள் கா. அன்புசெழியன், கு. ராசபாண்டியன், ஏ. [illegible] யோ[illegible] …னராக [illegible] துணை செயலாளராகவும், பொருளாளராகவும் கொண்ட புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. சிந்தாமணி ரோடிலிருந்த மேற்படி படிப்பகம், எண். 1 பழைய குயவர்பாளையம் என்ற முகவரிக்கு மாற்றப்பட்டது. 29—7—56ல், மீண்டும் செயற்குழு கூட்டுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

'ரஷ்ய மக்களிடை தெய்வநம்பிக்கை அழிந்துபடவில்லை'

'கிறித்துவ மதம் இன்னும் ஆற்றலோடு விளங்குகிறது'

பிரிட்டிஷ் பாதிரியார் கருத்து

மாஸ்கோ, ஜூலை 24—

'கிறித்துவ மதம், ரஷ்யாவில் இன்னும் தவிர்க்க முடியாத—இன்றியமையாத சக்தியாக விளங்கிக் கொண்டிருக்கிறது," என்று; பிரிட்டிஷ் தேவாலயத்தைச் சேர்ந்த பாதிரி ஒருவர் கூறியிருக்கிறார்.

டாக்டர் ஏ எம். ராம்சே என்ற அவர், ஆங்கில தேவாலய தூதுக் குழு ஒன்றிற்கு தலைமை ஏற்று, ரஷ்யாவில் உள்ள தேவாலயத்தவரின் அழைப்பிற்கிணங்க ரஷ்யாவிற்குச் சென்று, அங்கு 10 நாட்கள் தங்கி, ரஷ்ய மத நிறுவனங்களைப் பார்வையிட்டுவிட்டு லண்டன் திரும்புவதற்கு முன்னால் மேலும் கூறியதாவது :—

"இளைஞர்கள் பலர் தேவாலயத்திலிருந்து ஒதுங்கித்தான் நிற்கின்றனர்; என்றாலும், தேவாலய மகிமை—ஆற்றல் இன்னும் குன்றிவிடவில்லை தேவாலயம், கிழவர்களை மட்டும் வரவேற்றுக் கொண்டிருக்கவில்லை.

"ரஷ்ய மக்களிடை தொடர்ந்து, புண்ணியசீலம்—தெய்வநம்பிக்கை இருந்துதான் வருகிறது."

தெரிந்து கொள்ளுங்கள்

தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நலனுக்கான இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 20,28,00,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

'டில்லி தேவதைகள் விருப்பம்தான் சட்டமாகுமா?'

மக்கள் சபையில் காங்கிரஸ் உறுப்பினர் கேள்வி

பீகார் — மேற்கு வங்க மசோதா கூட்டுப் பொறுக்குக் குழுவிடம் செல்கிறது

புதுடில்லி, ஜூலை 25—

பீகார், மற்றும் மேற்கு வங்க நிலமாற்ற மசோதாவினை, மக்கள் சபை, கூட்டுப் பொறுக்குக் குழு ஒன்றின் பரிசீலனைக்கு விட்டிருக்கிறது. ஆகஸ்டு 7-ந் தேதிக்குள், அக்குழு, அறிக்கையைத் தாக்கல் செய்யவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் மொத்தம் 48 உறுப்பினர்கள் இருப்பர் என்றும், இவர்களில் 32 பேர் மக்கள் சபையிலிருந்து வருவர் என்றும் தெரியவருகிறது.

இந்த மசோதாவினை, பொறுக்குக் குழு ஒன்றின் பரிசீலனைக்கு விடுவது என்று உதவி உள்நாட்டு மந்திரி பி. என். தத்தார் ஒரு பிரரேபணை கொண்டுவந்தார்.

அந்தப் பிரேரபணையின் மீது பல உறுப்பினர்களும் விவாதம் நடத்தியிருக்கின்றனர்.

மந்திரி பேசும்போது, 'மசோதாவில் கண்டுள்ளபடி சில பிரதேசங்களை மேற்கு வங்கத்திற்கு மாற்றுவதற்கு பீகார் மக்கள் சம்மதிக்கத்தான் வேண்டும்' என்று கூறியிருக்கிறார்.

சிலர்—பீகாரைச் சேர்ந்தவர்கள் மேற்கு வங்கத்தவர்கள் மண்ணாசை கொண்டவர்களாக—ஏகாதிபத்திய வெறி கொண்டவர்களாக இருக்கின்றனர் என்று குற்றம் சாட்டியிருக்கின்றனர்.

இதனை மறுத்துப் பேசிய மேற்கு வங்க உறுப்பினர்கள் சிலர், மேற்கு வங்கம் ஒன்றும் அநியாயமான கோரிக்கையை எழுப்பவில்லை என்றும், நியாயமாக மேற்கு வங்கத்திற்குச் சேரவேண்டிய பிரதேசங்களை, வெள்ளைக்காரர்கள் அநியாயமாக—மேற்கு வங்கம் ஒரு முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் மாநிலமாகத் திகழவேண்டும் என்பதற்காகப் பீகாருடன் இணைத்து வைத்திருந்தனர் என்றும், எனவே, இன்று அந்தப் பிரதேசங்களைக் கோருவது தவ[illegible] எடுத்துக்காட்டியிருக்க[illegible].

மசோதாவில் குறிக்கப்ப[illegible]வது மட்டுமின்றி, மேலும் சில பிரதேசங்களைப் பீகாரிலிருந்து தரவேண்டுமென மேற்கு வங்கத்தவர் கோருகின்றனர். இதனால் இந்த மசோதா பீகார் மக்களையோ, மேற்கு வங்க மக்களையோ திருப்திப்படுத்துவதாக இல்லை என்றும் சிலர் கூறியிருக்கின்றனர்.

பீகாரைச் சேர்ந்த ஒரு காங்கிரஸ் உறுப்பினர், டில்லி தேவதைகளின் விருப்பம் போலவே நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்று கூறினாராம்!

உடனே மந்திரி தத்தார் எழுந்து, இங்கு தேவதைகள் எவரும் இல்லை என்றும், மந்திரிகள் எல்லாம் சேவகர்கள்தான் என்றும் கூறிவிட்டு, காங்கிரஸ் உறுப்பினரே இதுபோலப் பேசுவது தனக்கு வருத்தமாக இருக்கிறது என்றும் கூறினாராம்!

சிலர், இந்த மசோதாவைக் கைவிட வேண்டும் என்று கோரியிருக்கின்றனர்.

மேலும் சிலர், 'கூட்டுப் பொறுக்குக் குழுவிற்கு இந்த மசோதாவினை அனுப்புவது கூடாது' என ஒரு ஒழுங்குப் பிரச்சினையை மேலும் கிளப்பினராம்.

இத்தனை விவாதத்திற்கும் பிறகு மசோதா 48 பேரடங்கிய கூட்டுப் பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்குச் சென்றுள்ளது.

நடிப்பு-இசைப் புலவர் நண்பர்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நண்பர் இராமசாமி போன்று மக்களால் அனுப்பப்படுகிற கலைத் தூதுவர்கள்தான், செல்லுகின்ற இடத்தில், வாழுகின்ற மக்களிடை நமது நாட்டு நிலையை எடுத்துச் சொல்லவும், அங்குள்ள நிலையை நமக்கு எடுத்துச் சொல்லவும் முடியும்.

"மலேயாவிற்கு இங்கிருந்து சென்றுள்ள மக்கள் எல்லாம் இங்கு வாழ்ந்துவிட்டு, வாழ்வில் பயன் காணாத நிலையில், 'தூரத்துப் பச்சை கண்ணிற்குக் குளுமை' எனக்கருதி மலேயாவிற்கு பிழைப்பிற்காகச் சென்றவர்கள்தான். அங்கு இரப்பர் காடுகளில் வேலை செய்து, உழைத்துச் சலித்து அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தாயகத்தின் நிலையை நண்பர் இராமசாமி அவர்கள் எடுத்துக் கூறுவார் என்று எதிர்பார்க்கலாம். அதேபோல அங்குள்ள மக்களின் நிலையையும் அனுபவங்களையும் நமக்கு இங்குவந்து சொல்லவிருக்கிறார், நண்பர் கே. ஆர். இராமசாமி.

"அவர் மலேயா செல்வதை ஒட்டி, அவருக்குப் பாராட்டும், வழியனுப்பும் கூறுவதற்காக இந்த விழாவினை ஏற்பாடு செய்த எஸ். எஸ். இராசேந்திரன் நாடக மன்றத்தினரை நான் பாராட்டுகிறேன்; அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்"

—என்று, அண்ணா அவர்கள், சென்னை உட்லண்ட்ஸ் ஓட்டலில், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் மலேயா செல்வதை ஒட்டி நடைபெற்ற வழியனுப்பு விழா ஒன்றிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

நடிப்பு-இசைப் புலவர் கே ஆர். இராமசாமி அவர்கள் மலேயா செல்வதை ஒட்டி, எஸ். எஸ். இரா[illegible]சேந்திரன் நாடக மன்றத்தினர் 25-[illegible] 6-மணியளவில், சென்னை-எட்வர்டு எல்லியட்ஸ் ரோடிலுள்ள உட்லண்ட்ஸ் ஓட்டலில், வாழ்த்தி வழியனுப்பு விழா ஒன்று நடத்தினர்.

சுவைமிக்க தேநீர் விருந்திற்குப் பிறகு, விழா, அண்ணா அவர்கள் தலைமையில் துவங்கிற்று.

தோழர் டி. வி. நாராயணசாமி அவர்கள் அனைவரையும் வரவேற்று அண்ணா அவர்களைத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு கேட்டுக் கொண்டார்.

அண்ணா அவர்களுக்கும், நண்பர் இராமசாமி அவர்களுக்கும் அவர் மலர் மாலை அணிவித்தார்.

அண்ணா அவர்களின் தலைமை உரைக்குப்பின், பல நடிகர்களும், தோழர்களும் இராமசாமி அவர்களின் கலைத் தொண்டினையும், நடிப்புத் திறனையும், இசைப் புலமையையும் பாராட்டியதோடு, அவர் மலேயா சென்று நற்பெயரோடும், புகழோடும், செல்வத்தோடும் தாயகம் திரும்பி, தமிழகத்திற்குப் பெருமை தரவேண்டுமென வாழ்த்தினர்.

திருவாளர்கள் டி. கே. முத்துசாமி, சக்தி-கிருஷ்ணசாமி, (பிரண்ட்) இராமசாமி, யதார்த்தம் பொன்னுசாமி (பிள்ளை), டைரக்டர் காசிலிங்கம், சி. பி. சிற்றரசு, நாரதர் சீனிவாச ராவ், ஆசைத்தம்பி, பொன்னம்பலனார், கருணாநிதி ஆகியோர் நண்பர் இராமசாமி அவர்களுக்கு வழியனுப்பு உபசாரம் கூறினர்.

நண்பர் கே. ஆர். இராமசாமி அவர்கள், தனக்குத் தரப்பட்ட இந்த வழியனுப்பு உபசாரத்திற்கு நன்றி கூறிக்கொண்டார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் எஸ். எஸ். இராசேந்திரன் விழாவிற்கு வந்திருந்து சிறப்பித்த அனைவருக்கும் நன்றி கூறிக் கொண்டார்.

விழாவில், கழகத் தோழர்கள் பலரும், கலை உலகப் பிரமுகர்களும், நடிக-நடிகையர் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

வாழ்வளிக்கும் திட்டமா? வரவு-செலவு திட்டமா?

வறுமையை விரட்ட வகை எங்கே? வேலைதர வாய்ப்பு எங்கே?

2-வது திட்டத்தில் திருச்சி பெறப்போவது என்ன?

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திருச்சி மாவட்டத்திற்கான திட்டங்களுக்கு ரூ 6,95,00,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அந்தத் திட்டத்தின்படி புதிய மின்சார உற்பத்தி நிலையமொன்று கட்டப்படும்.

கல்விக்கு ரூ. 108 இலட்சமும், வைத்தியத்துறைக்கு ரூ. 18 இலட்சமும், பொது சுகாதாரத்திற்கு ரூ 28 இலட்சமும், அரிசனங்களுக்கு ரூ. 124 இலட்சமும், நீர்ப்பாசனத்திற்கு ரூ 129 இலட்சமும், போக்குவரத்திற்கு ரூ. 115 இலட்சமும், விவசாயத்திற்கு ரூ 26 இலட்சமும், கால்நடைகளுக்கு ரூ. 31 இலட்சமும், குடிவசத் தொழிலுக்கு ரூ 23 இலட்சமும், கூட்டுறவுக்கு ரூ 58 இலட்சமும், சமுதாய நலத் திட்டங்களுக்கு ரூ. 32 இலட்சமும், சிறிய பஞ்சாயத்துக்களுக்கு ரூ. 2 இலட்சமும், அரிசனங்களுக்கு ரூ 50 ஆயிரமும் செலவிடப்படும்.

முசிரி வட்டம், புளியஞ்சோலை கிராமத்திற்கு அருகில், கொள்ளிமலையில் ரூ 2 கோடி செலவில் புதிய நீர் மின்சார நிலையமொன்றும் கட்டப்படும்.

மொத்த செலவுத் தொகையில் ரூ. 255 இலட்சம் அரசாங்க முதலீடாகவும், ரூ. 260 இலட்சம் பொதுமக்கள் முதலீடாகவும், ரூ. 180 இலட்சம் கடன்தொகைகளின் முதலீடாகவும் இருக்கும்.

கழகக் கூட்டம்

★

திருச்செங்கோடு:

28-7-56 மாலை 6-30 மணிக்கு

தலைவர்: எஸ். பி. சின்னையன்

பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
சிற்றுளி—சுப்பிரமணியம்
டி. ஏ. நடேசன்

★

புவனகிரி:

ஆற்று மணற்பரப்பில்
28—7—56 மாலை 6 மணிக்கு

பேசுபவர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி

★

சேலூர் (வ. ஆ. மா.)

புதிய பாடசாலை வெளியில்
தி. மு. கழக 6-வது ஆண்டு விழா
28—7—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: முல்லை—சத்தி

துவக்குபவர்: ஏ. எல். சி. கிருட்டிணசாமி

பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
போளூர்—கே. சுப்பிரமணியம்
க. நெடுஞ்சோழன்

★

பொள்ளாச்சி:

மார்க்கெட் ரோடிலுள்ள
திருவள்ளுவர் திடலில்
28—7—56 இரவு 7 மணிக்கு

பேசுவோர்:
கி. மனோகரன்
வி. சண்முகநாதன்

பம்பாய் தி. மு. க. பொதுக்குழு கூட்டம்

"22—7—56-ல் நடைபெற விருந்த பொதுக்குழுக் கூட்டத்தில், சில கிளைகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்ள இயலாத நிலையேற்பட்டு விட்டமையால் 29—7—56 மாலை 6-30 மணிக்கு மீண்டும் பொதுக்குழுவைக் கூட்டுவதென முடிவாகியுள்ளது; எனவே, 29-7-56 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு, தாராவி—'திராவிடரக'த்தில் கூடுகின்ற பொதுக்குழுவில் கிளைக் கழகச் செயலாளர்களும், கிளைப் பிரதிநிதிகளும் தவறாது சலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்,"

என்று, பம்பாய் தி. மு. கழகச் செயலாளர் எஸ். தியாகராசன் அவர்கள் அறிவிக்கிறார்.

நாலடியார் வகுப்பு

27—7—56 மாலை 6 மணிக்கு, சென்னை — கோமளேசுவரன் பேட்டை முன்னேற்றக் கழகம்—சவலை இராமசாமி முதலியார் பட்டி மண்டபம் ஆகியவற்றின் சார்பில், கழகக் கட்டிடத்தில், நாலடியார் வகுப்பு ஒன்றை ஆரம்பிக்கும்பொருட்டு, டாக்டர் மு. வரதராசனார் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். திரு. ரா சண்முக சுந்தர செட்டியார், வகுப்பை துவக்கிவைப்பார்; திருவாளர்கள் தி. சு. நடராசம் பிள்ளை, ரா. நடேச நாயகர், ரா. சக்கரபாணி நாயகர் ஆகியோர் பேசுவர்.

ரூ. 50 கோடி செலவில் பால்பண்ணை திட்டம்

சென்னை, ஜூலை 26—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பால் பண்ணை, கால்நடை பராமரிப்புத் திட்டங்களுக்காக ரூ. 50 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தகவல் தரப்பட்டுள்ளது. இத்திட்டத்தை அமுல் நடத்தும் பல்வேறு மாநில சர்க்கார்களுக்கும் மானிய ரீதியில உதவி தரப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதுவை வட்ட தி.மு.க. உறுப்பினர் கூட்டம்

"29-7-56 காலை 9-மணிக்கு புதுவை ஈசுவரன் கோயில் தெரு, திரு தட்சிணாமூர்த்தி செட்டியார் கலியாண நிலையத்தில், தெ. ஆ. மாவட்டச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் அவர்கள் தலைமையிலும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையிலும், புதுவை வட்டத் தி. மு. க. உறுப்பினர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது, வட்டத்திலுள்ள எல்லாக் கிளைகளின் உறுப்பினர்களும் அவசியம் கலந்துகொள்ள வேண்டுகிறேன்.

"அன்று மாலை 6-மணிக்கு, ஒதியஞ்சாலைத் திடலில், புதுவைப் பஞ்சாலைத் தொழிற் சங்கத்தார், பொதுச்செயலாளருக்கு வரவேற்பளிப்பார்கள்; அவ்வரவேற்புக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்,"

என்று, புதுவை தி. மு. கழகச் செயலாளர் ச. சிவப்பிரகாசம் அவர்கள் அறிவிக்கிறார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

27—7—56 வெள்ளி மாலை 6-மணிக்கு, சென்னை-இராயபுரம் பனைமரத்தொட்டியிலுள்ள சித்தனைச் சிற்பி சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றத்தில், தோழர் இளவழகன் தலைமையில், 'மறுமலர்ச்சி' என்பது குறித்துத் தோழர்கள் பலர் பேசுவர்.

'நீ எனக்கு'-நாடகம்

28-7-56 மாலை 6 மணிக்கு, சென்னை - எழும்பூர் மியூசியம் தியேட்டரில், 31-வது வட்ட வள்ளுவர் மன்ற வளர்ச்சி நிதிக்காக, தோழர் கண்ணதாசன் தலைமையில், வரதராசபுரம் நடிக நண்பர்களால், 'நீ எனக்கு'—என்ற நாடகம் நடைபெறும்.

சென்னை — எஸ்பிளனேடு ஒய். எம். சி. ஏ.,

27-7-56 மாலை 6-30 மணிக்கு 'மேடைப் பேச்சு பள்ளி' சார்பில் திரு. பி. ஆர் விசயரங்கம், 'திலகர்—ஓர் சமூகத் தொண்டர்' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார்; திரு. டி. மோகன கிருட்டிணன் தலைமை வகிப்பார்.

இரயில் வாகன்களில்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வாகன்களை வேறு வேலைகளுக்குப் பயன்படுத்த முடியாதா? இரயில்வே ஊழியர்கள், இதுபோன்ற திடுக்கிடத்தக்க நிலைமைகளில்தான் வேலை செய்ய வேண்டுமா?" என்று எச் என். முகர்ஜி கேட்டிருக்கிறார்.

பதிலளித்த இரயில்வே மந்திரி சாஸ்திரியார் அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் 50,000 வீடுகள் கட்டப்படும் என்றும், அப்போது இந்த வாகன்களில் ஊழியர்கள் வாழ்வதை மாற்றியமைப்பதாயும் கூறினாராம்.

"பாழாகிப்போன வாகன்களில் வாழ்ந்து வந்தோரை நாங்கள் அப்புறப்படுத்தினோம்; என்றாலும், அவர்கள் தொடர்ந்து அதில் வாழவே விரும்புகின்றனர்" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.